வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 17.08.2024 சனிக்கிழமை | இதழ் : 230 | பக்கங்கள் : 12




**உருவானது 'இயலும் சிறீலங்கா' கூட்டணி**

## 34 அரசியல் தரப்பினர் ரணிலுடன் புரிந்துணர்வு



கொழும்பு, ஓகஸ்ட் 17

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பவர்கள் ஒன்றிணைந்து "இயலும் சிறீலங்கா" என்ற பெயரில் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர்.**

34 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் இந்த ஒப்பந்தத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைச்சாத்திட்டனர். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பு வோர்டஸ் எஜ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மஹஜன எக்சத் பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ஈ. பி. டி. பி. கட்சி சார்பில் அதன் செயலாளரும் 11

## கட்சி தாவிய எம். பி. மீது முறைப்பாடு!

கொழும்பு, ஓக. 17

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ள ரிஷாத் பதியுதீன் கட்சியின் எஸ். எம். எம். முஷாரப் எம். பிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவரின் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களே நேற்று வெள்ளிக்கிழமை இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். எம். எம். முஷாரப் உள்ளிட்ட உறுப்பினர்கள் அரச நிதியை தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்று கூறியே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், 11



## கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்தில் பக்தர்கள் வழிபடுவதற்கு அனுமதி!

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஓக. 17

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்துக்கு பக்தர்கள் சென்று வழிபட நேற்று முதல் இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

புகழ்பெற்ற கீரிமலை கிருஷ்ணர் ஆலயம் கடந்த 34 ஆண்டுகளாக இராணுவத்தின் பிடியில் உள்ளது. இதனால், இந்த ஆலயத்துக்கு மக்கள் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருக்கவில்லை. 11

## இலங்கை இராணுவத்தினர் ஐவர் உக்ரைன் படையினரால் கைது!

கீவ், ஓக. 17

ரஷ்யப் போருக்குச் சென்ற ஓய்வு பெற்ற இலங்கை இராணுவத்தினர் 05 பேர் உக்ரைன் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் உக்ரைன் அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவித்தலை துருக்கியிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் ரஷ்ய எல்லை வழியாக உக்ரைனுக்குள் நுழைந்தபோது உக்ரைன் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. 11



## நாகையிலிருந்து காங்கேசனை வந்தடைந்தது சிவகங்கை படகு!

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஓக. 17

நாகபட்டினத்திலிருந்து (நாகை) 41 பயணிகளுடன் சிவகங்கை படகு நேற்று வெள்ளிக்கிழமை மாலை காங்கேசன்துறையை வந்தடைந்தது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் நாகபட்டினத்திலிருந்து பயணத்தைத் தொடங்கிய சிவகங்கை படகு நேற்று மாலை 5 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

யாழ்ப்பாணம் வந்த பயணிகளை யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் 11

## நாமல் ஜனாதிபதியானால் ஜோன்ஸ்டன் பிரதமராவார்

உதயங்க வீரதுங்க தகவல்

கொழும்பு, ஓக. 17

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரது தலைமையில் உருவாக்கப்படும் அரசாங்கத்தில் பிரதமர் பதவி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கே வழங்கப்படும் என ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 11

## யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தை ஆரம்பிக்கின்றார் திலித் ஜயவீர!



கொழும்பு, ஓக. 17

ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகளின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தேசிய மட்ட அரசியல் கூட்டணியொன்று ஜனாதிபதித் தேர்தல் 11

## கொள்ளையர்களுடன் ஒருபோதும் டீல் இல்லை!

எதிர்க்கட்சி தலைவர் சஜித்



கொழும்பு, ஓக. 17

"எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் நாம் கொள்ளையர்களுடன் டீல் செய்யமாட்டோம்" - இவ் வாறு கூறியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ.

நேற்று குருநாகலில் நடத்திய அவரின் முதல் பிரசா ரக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு 11

## மைத்திரியின் ஆதரவை நிராகரித்தாராம் ரணில்!

கொழும்பு, ஓக. 17

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த விருப்பத்தை ஜனாதிபதி நிராகரித்து விட்டார். இடைத் தரகர் மூலமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தனது விருப்பத்தை தெரிவித்திருந்தார் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பெலியத்தையில் நடந்த மக்கள் சந்திப்பு 11

## கொள்கைகளை மாற்றினால் கடும் பாதிப்புகளே ஏற்படும்!

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஓக. 17

தற்போதைய கொள்கைகளை கைவிட்டால் நாடு கடும் பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) உடன்படிக்கையில் மாற்றங்களை செய்வோம் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முக்கிய அரசியல் வாதிகள் கூறிவரும் நிலையிலேயே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நடக்குமா நடக்காதா என்று ஒவ்வொருவர் மனதிலும் சந்தேகத்தை ஏற்படுத்திக்கொண்டே இருந்த ஜனாதிபதித் தேர்தல் இப்போது அடுத்த கட்டத்தை எட்டியிருக்கின்றது. தேர்தல் களத்தில் முப்பத்தி ஒன்பது பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் பலர், தாமும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டோம் என்று வரலாற்றில் பதிவை ஏற்படுத்துவதற்காக போட்டியிடுகின்றவர்கள்.

வேறு சிலர், பிரதான போட்டியாளர்களால் அவர்களுக்கு ஆதரவாகக் களம் இறக்கப்பட்டவர்கள்.

பிரதான போட்டியாளர்களான சஜித் பிரேமதாஸவும் அநுர குமார திஸநாயக்கவும் படையினர் மற்றும் முன்னாள் படை அதிகாரிகளை தம்மோடு சேர்த்து வருவது, படையினர் - அவர்களின் குடும்பத்தினர் தமக்கு வாக்களிப்பார்கள் என்பதால்தான் என்பது இரகசியமானதல்ல. அதனால், அவர்களுக்கு இந்த வாக்குகள் செல்வதைத் தடுப்பதற்காகவே சரத் பொன்சேகா களத்தில் இறக்கப்பட்டார் என்பதும் அதேபோல இரகசியமானதல்ல.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக இருந்த சரத் பொன்சேகா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவிருக்கிறார் என்றே கடைசி வரை சொல்லப்பட்டு வந்தது. அவரின் நூல் வெளியீட்டு விழா ஒன்று சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற போது அதில் ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். அப்போதே அவர் ரணிலுடன் இணைந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் அவ்வாறு இணைந்துகொள்ளாமல் தனி வேட்பாளராகக் களம் இறங்கியுள்ளார். அதுமட்டுமின்றி, அவர் ரணில் பக்கத்துக்கு வந்து மேடையேறி, சஜித் பிரேமதாஸவுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதிலும் பார்க்க, எதிர் வேட்பாளராக இருந்துகொண்டு சஜித்துக்கு எதிராகப் பிரசாரம் செய்வது அதிக பலனைத் தரும் என்றும் கணக்குப் போட்டிருக்கலாம்.

இதேபோலவே நாமல் ராஜபக்ஷ என்ற பெயரில் லக்ஷமன் நாமல் ராஜபக்ஷ என்பவர் போட்டியிடுகின்றார். இவர் தொடர்ந்து ராஜபக்ஷக்களுக்கு எதிராக களம் இறக்கப்படுகின்றமை பல தேர்தல்களில் நடைபெற்று வருகின்றது. சாதாரண வாக்காளர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு ஒரு ராஜபக்ஷவை திட்டமிட்டு களம் இறக்கி வருகின்றனர். இந்தத் தடவை ராஜபக்ஷ குடும்பத்திலிருந்தும் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவதால், இந்தக் குழப்பத்தை நிவர்த்தி செய்வதற்காகவே அவர்கள் பிரத்தியேகமாகப் பிரசாரம் செய்யவேண்டியிருக்கும்.

இப்படி ஏராளமான வேட்பாளர்கள் போட்டியில் வெற்றி பெறுவதற்காக இல்லாமல் ஏதோவொரு காரணத்துக் காகவே களம் இறங்கியுள்ளனர் அல் லது களம் இறக்கப்பட்டுள்ளனர். கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் அரசு கட்சியில் போட்டியிட்ட ஒரு பிரதான வேட்பாளரே சுயேச்சையாக ஒரு குழுவை களம் இறக்கியிருந்தார். அதற்குக் காரணம் வேறு ஒன்றுமல்ல, தனது கட்சியின் சார்பில் தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள், வாக்கு எண்ணிக்கை நிலையங்களில் பிரதி நிதிகளாக நியமிக்கப்படுபவர்கள்மீது அவருக்கு இருக்கும் சந்தேகமே இவ் வாறு தனியாக சுயேச்சைக் குழுவின் சார்பில் தனது பிரதிநிதிகளை நியமித்து தனது கட்சியின் பிரதிநிதிகள் ஏதாவது, குளறுபடி செய்கிறார்களா என்பதைக் கவனிப்பதற்காகவே அவர் அவ்வாறு சுயேச்சை குழுவை களம் இறக்கியிருந்தார்.

ஒரு பாராளுமன்றத் தேர்தலில் ஒருவர்தான் எம். பியாகத் தெரிவாக வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்கின்றார் என்றால், நாட்டை அடுத்த ஐந்து வருடங்களுக்கு "ஆளப்போகின்ற" ஒருவர், அந்தப் பதவியை எட்டுவதற்காக என்னவெல்லாம் செய்வார் என்பதை நாம் ஊகிப்பது கடினம் அல்ல.

சரி, இனி இன்று சொல்லவந்த விடயத்துக்கு வருவோம்.

முன்னரும் ஒரு தடவை இந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். தனக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டபோது, தனக்கு ஆதரவு தேடி கட்சித் தலைவர்களுடன் பேசிய போது ரணில் ஒரு முஸ்லிம் தலைவருக்கு சொன்னது பற்றி எழுதியிருந்தேன்.

"உங்கள் கட்சியில் ஐந்து எம். பிக்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆதரவைப் பெறவேண்டுமானால் அந்த ஐந்து எம். பிக்களுடனும் தனித்தனியாக பேசி, ஒவ்வொருவருடனும் "டீல்" போட வேண்டியிருக்கின்றது. ஆனால், கூட்டமைப்பில் பதினாறு எம். பிக்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஒருவருடன் பேசினாலே போதுமானது" என்று ரணில் அந்த முஸ்லிம் கட்சித் தலைவருக்கு சொன்னார் என்று ஒரு தடவை அவர் சொல்லியிருந்தார்.

அதாவது, ஒவ்வொருவருடனும் எப்படி "டீல்" போடவேண்டும் என்பதை நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்ற தலைவர் என்றால் அது ரணில் விக்கிரமசிங்கதான்.

அவரின் அந்தத் திறமை இப்போது வெளித்தெரியத் தொடங்கியிருக்கின்றது. சிறுபான்மை கட்சிகளின் ஆதரவைத் தனக்கு பெறுவதற்காக முயன்ற ரணில், அதில் வெற்றியடைய முடியாத போது இப்போது அந்த சிறுபான்மை கட்சிகளை தனக்கே உரிய பாணியில் கையாளத் தொடங்கியிருக்கின்றார்.

அதனால்தான், ரிஷாத் பதியுதீனின் கட்சி சஜித் பிரேமதாஸவுடன் இணைந்துகொள்ள - அவரின் கட்சியிலிருந்த மற்றைய எம். பிக்கள் ஒவ்வொருவராக ரணிலுடன் இணைந்து வருகின்றனர்.

இதேபோல மனோ கணேசனின் தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்தும் ஒருவரை தனது பக்கத்துக்கு இழுத்தெடுத்திருக்கிறார் ரணில். கண்டி மாவட்டத்தின் எம். பியான வேலு குமார் இப்போது கட்சி தலைமையின் முடிவுக்கு எதிராக ரணிலுடன் இணைந்திருக்கிறார். அவர் இவ்வாறு அணி மாறியதையொட்டி மனோ கணேசன் வெளியிட்ட அறிக்கைதான் இந்த ஊர்க்குருவியின் கவனத்தை பெற்றது.

"வேலு குமார், வரலாற்று குப்பை தொட்டியில் விழுந்துள்ள குப்பை. வரலாற்று துரோகிக்கு கண்டி மக்கள் மறக்க முடியாத பாடம் கற்பிப்பார்கள்."

இதுதான் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையின் தலைப்பு.

தமது விருப்பத்துக்கு மாறாக செயல்படுகின்றவர்களை துரோகிகள் ஆக்கிய கலாசாரத்தை தொடக்கி வைத்தவர்கள் ஈழத்தமிழ் அரசியல் வாதிகள். இன்று அதே நோய் மலையகத்திலும் தொற்றத் தொடங்கியிருக்கின்றதோ என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

- ஊர்க்குருவி.

## நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 17

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று சனிக்கிழமை ஆறுகால் மடம் ஐயப்பன் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 17

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

காயத்திரிபீடம் தர்மசாஸ்தா குருகுல ஆசிரியர் சிவசிறீ மகாதேவ சோமசுந்தர குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா கேதீசன் பிரதம அதிதியாகவும் யாழ். பல்கலைக் கழக சைவசித்தாந்தத்துறை தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், சைவ வாலிப சங்க அறநெறி பாடசாலை, பன்னாலை கணேசா அறநெறி பாடசாலை, தவளக்கிரி முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை, நீர்வேலி அழகேஸ்வரி விநாயகர் அறநெறி பாடசாலை, விழிசிட்டி ஞான வைரவர் அறநெறி பாடசாலை, மாவை பொதுச்சேவை கழக அறநெறி பாடசாலை, அண்ணமார் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக விஜயகுமாரா சர்மா வத்சாங்கித சர்மா வழங்கும் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## சந்நிதியான் ஆலயத்தில் இன்று சப்பை ரத திருவிழா!

வடமராட்சி, ஓக. 17

வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்று சப்பை ரதத் திருவிழா நடைபெறவுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பை ரதத் திருவிழா நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6. 30மணிக்கு மௌனத்திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவுறும்.

இதேநேரம், தேர், தீர்த்தத் திருவிழாக்களை ஒட்டி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், சுகாதார, குடிதண்ணீர் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நாட்களில் சந்நிதியான் ஆலயத்துக்கு அண்மையாகவுள்ள 20 மடங்களில் அன்னதானமும் நடைபெறவுள்ளது.(02)

## தெய்வீக சுகானுபவம்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்துடன் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு இணைந்து நடத்தும் தெய்வீக சுகானுபவம் - 10 நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் சங்கிலியன் தோப்பில் (கிட்டு பூங்கா) நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் உள்ளூர் கலைஞர்களின் கலை நிகழ்வும் இந்தியாவின் பிரபல கர்நாடக இசைக் கலைஞர் கலாநிதி சீ. சௌம்யாவின் இசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளன. (ஐ)

## மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவராக சோபித்த!

கொழும்பு, ஓக. 17

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் ஆர்.எம். சோபித்த ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி அவர் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவரான நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்தநிலையில், அவர் மீண்டும் நாடு திரும்பும் வரையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் ஆர்.எம்.சோபித்த ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 17.08.2024 வெள்ளிக்கிழமை

குரோதி வருடம், ஆவணி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# புலம்பெயர் அமைப்புகள் புரிந்துகொள்ளுமா?

கனடிய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடையை மீளவும் புதுப்பித்திருக்கின்றது. 2006ஆம் ஆண்டு கனடா விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்தது. ஒவ்வோர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தடையை மறுபரிசீலனை செய்து மீளவும் உறுதிப்படுத்துகின்றது. நாடுகளின் வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்கப் போராடுவதாகவும் தொடர்ந்து சத்தம் போட்டால் அது சாத்தியம் என்றும் இப்போதும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் இருக்கின்றனர். புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மத்தியில் தங்களின் "லொபி"யால் கனடாவின் வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்க முடியுமென்று நம்பிக் கொண்டிருப்போர் இருக்கின்றனர்.

கனடாவில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் தலையீடு எத்தகையது? தங்களின் தலையிடும் ஆற்றலை அவர்கள் எவ்வாறு புரிந்து வைத்திருக்கின்றனர்? எல்லாவற்றையும் அறிவுக் கண்கொண்டு நோக்காமல் வெறும் உணர்வின் வழியாக அணுகுவதன் விளைவாக தமிழ்த் தேசிய அரசியல் சூழல் தொடர்ந்தும் அறிவுக்குறைபாட்டால் பாதிக்கப்பட்ட சமூகமாகவே காட்சியளிக்கின்றது.

உண்மையில், ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் புலம்பெயர் சமூகம்தான் அரசியலை அதிகம் அறிவுபூர்வமாக அணுகுபவர்களாக இருந்திருக்க வேண்டும். அரசியலை அறிவுபூர்வமாக அணுகுவதில் தாயகத்துக்கு அவர்கள் வழிகாட்டியிருக்க வேண்டும். ஆனால், நிலைமையோ தலைகீழாக இருக்கின்றது. ஒப்பீட்டு அடிப்படையில் அறிவுசார் மேற்குலகத்தோடு அதிகம் ஊடாடுவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கும் தமிழ் புலம்பெயர் சமூகம் தொடர்ந்தும் கற்பனைகளில் மூழ்கிக் கிடக்கும் தரப்பாகவே இருக்கின்றது.

அவர்களின் புரிதல் தவறானது என்பதை அவ்வப்போது மேற்குலகம் நிரூபித்தாலும்கூட தமிழ் புலம்பெயர் சமூகம் இதன் தாற்பரியத்தை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மேற்குலகம் சர்வதேச பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்திருக்கின்றது. புலம்பெயர் அமைப்புகள் தங்களை ஆற்றலுள்ளவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தபோதுதான் 2006இல் கனடா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்தது. கனடாவில் ஈழத் தமிழர்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்துவதாக எண்ணிக் கொண்டிருக்கும்போதுதான் கனடா புலிகளைத் தடை செய்தது. கனடிய பாராளுமன்றத்தில் ஈழத்தமிழர்களுக்கு குரல் இருந்த போதிலும்கூட தமிழர்களால் எதனையும் செய்ய முடியவில்லை.

இதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு புலம்பெயர் சமூகம் புதிதாக சிந்திக்க முற்படவில்லை. இப்போதும் பழைய கற்பனாவாதத்துக்குள் மட்டுமே தன்னை சுருக்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, கனடாவில் சுமார் பதினான்கு இலட்சம் இந்திய புலம்பெயர் சமூகத்தினர் கனடாவில் வாழ்கின்றனர். கனடாவில் சீக்கிய தீவிரவாத அமைப்பை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்த இடத்தில் இந்திய புலம்பெயர் சமூகத்தால் என்ன செய்ய முடிந்தது?

பதினான்கு இலட்சம் இந்திய புலம்பெயர் சமூகத்தால் கனடாவின் வெளிவிவகார கொள்கையில் தலையீடு செய்ய முடியாதபோது மூன்று இலட்சம் ஈழத்தமிழ் புலம்பெயர் சமூகத்தால் கனடிய வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்க முடியுமென்று எண்ணுவது எந்த அடிப்படையில் சரியானது? இந்த விடயத்தை அறிவுபூர்வமாக அணுகினால் மட்டுமே புலம்பெயர் சமூகத்தின் ஆற்றல் என்ன - அதனால் தாயகத்திலுள்ள மக்களுக்கு என்ன செய்ய முடியும் - என்று தீர்மானிக்க முடியும். செய்ய முடியாதவற்றை செய்ய முடியுமென்று நம்பிக் கொண்டிருப்போரால் ஓர் இனத்துக்காக எதனையும் செய்ய முடியாது.

கனடா ஓர் அரசு. உள்நாட்டில் வாக்குகளை திரட்டுவதற்காக கனடிய அரசியல்வாதிகள் பேசுவதை கனடாவின் கொள்கை நிலைப்பாடாக கருதும் தவறை புலம்பெயர் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.



## நல்லூரான் திருவடி - 9

# யோகரின் பக்தர் நீதியரசர் அக்பர்!

**டாக்டர் எஸ்.இராமநாதன்**
(சுன்னாகம்)

இலங்கையில் அனைத்து இடங்களிலும் அனைத்து இன, மதங்களையும் சேர்ந்தவர்கள் யோக சுவாமிகளின் பக்தர்களாக இருந்தனர். அத்துடன், அவரின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த வெளிநாட்டினரும் யோகரின் அருளைப் பெற்றிருந்தனர்.

யோகரின் அருள் இன்றுவரை வெளி உலகத்தவரிடையேயும் ஆழவேரூன்றியிருக்கின்றது என்பதற்கு ஹவாயில் யோகரின் முக்கிய சீடர்களில் ஒருவரான சிவாய சுப்பிரமுனிய என்ற அமெரிக்கர் அமைத்துள்ள ஆச்சிரமம் ஒரு நல்ல சான்றாக இருக்கின்றது. இலங்கையில் இஸ்லாமிய மதத்தினரான நீதியரசர் அக்பர் யோகசுவாமிகள் மீது அபாரமான பக்தியைக் கொண்டிருந்தார். இஸ்லாமிய சம்பிரதாயங்கள் மற்றும் அவர்களின் வேத நூலான அல்-குர்ஆன் என்பவை பற்றி யோகர் ஆழமான அறிவைக் கொண்டிருந்தார். அத்துடன், எந்த ஒரு மதத்தினரும் அவரைத் தரிசிக்க வருகையில் அவர்களின் வேத நூல்களிலிருப்பவற்றையே யோகர் உதாரணம் காட்டி அறிவுரை கூறுவார்.

தமிழ்நாட்டில் நாகூரில் சூரியனைப் பார்த்தவாறு தவமிருக்கும் பக்கீர்மாரைப் பற்றியும் நாகூரில் கொடுக்கப்படுகின்ற கந்தூரி பற்றியும் வியந்துரைப்பார். அவர் இறைவனை ஓம் நமசிவாய என்று மட்டும் கூறவில்லை. அவரவரின் சமய பிரார்த்தனைகளின் அடிப்படையில் இறைவன் புகழை உரக்கக்கூறுவார். "அல்லாஹஜ் அக்பர்" என்று இஸ்லாமியர்கள் கூறுவதுபோலவும் பிரார்த்திப்பார். எனவே, அவரிடம் இன, மத, பிரதேச வேறுபாடுகள் என்ற சாதாரண மனிதரிடையே காணப்படுகின்ற சிறுமைத்தனமான வேறுபாடுகள் இருக்கவில்லை. இதன்காரணமாகவே அவர் ஒரு மகானாக போற்றப்பட்டார்.

ஒழுக்கசீலமுடைய சிறந்த இஸ்லாமியராக வாழ்ந்தவர் நீதியரசர் அக்பர். யோகரிடத்தில் அபாரமான பக்தியை அக்பர் கொண்டிருந்தார். யோகரும் நீதியரசர் அக்பரை ஒரு சிறந்த அன்பரென்றே கூறுவார். அக்பர் ஒரு தடவை யோகரைச் சந்திக்கச்சென்ற வேளை, "இப்போது நேரமில்லை", என்று திருப்பி அனுப்பிவிட்டார் யோகர். அப்போது அக்பர் ஒரு சொலிசிட்டர் என்பதை யோகரின் கவனத்துக்கு சிலர் கொண்டுவந்தனர். அப்போது யோகர், சொலிசிட்டரானாலென்ன, நீதியரசரானாலென்ன, தமக்கு இப்போது நேரமில்லை என்று குறிப்பிட்டார். அச்சமயம் யோகர் தம்மை மறைமுகமாக நீதியரசர் என்று குறிப்பிட்டதையே வீடு சென்றபோது உணர்ந்து கொண்டார் அக்பர். ஏனெனில், அக்பர் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள கடிதம் சுவாமிகளைச் சந்தித்த பின்னர் தமக்கு உத்தியோகபூர்வமாக கிடைத்ததைக் கண்டார் நீதியரசர் அக்பர். யோகரைச் சந்தித்த சிலமணிநேரத்தில் தமக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் பதவி கிடைத்துள்ளதை அக்பர் அறிந்து சுவாமியின் கருணையை எண்ணி வியந்தார்.

நீதியரசர் அக்பர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய காலத்தில் ஒரு தடவை யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் இருந்த சிறைச்சாலையை பார்வையிடச் சென்றிருந்தார். அங்கிருந்த தூக்கு மேடையைக் கண்டு துயருற்றார் நீதியரசர் அக்பர். வீட்டுக்கு வந்த நீதியரசர் தமக்கு ஏற்பட்ட மன வேதனை காரணமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். அச்சமயம் யோகர் நீதியரசர் அக்பரின் இல்லத்துக்குச் சென்று, டாக்டரைப்போல நெஞ்சில் கைவைத்துப் பார்த்தார். பின்னர் எல்லாம் சுகமாகிவிடும் என்று ஆறுதல் கூறினார். நீதியரசர் அக்பர் தாம் பங்குபற்றிய நிகழ்ச்சிகளில் பேசக் கிடைத்த சந்தர்ப்பங்களில் யோகரின் மகிமைகளை கூறாமல் விடுவதில்லை.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**மிதுனம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைப்பீர்.

**கன்னி**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சகஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். முயற்சியால் முன்னேறுவீர்.

**விருட்சிகம்**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்ப தால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். விழிப்புடன் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டிவரும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். பொறுமைத் தேவையான நாள்.

**கும்பம்**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**மீனம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

# உதயநிதிக்கு எதிரான வழக்குகளை வேறு மாநிலத்துக்கு மாற்ற முடியும்

## உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவிப்பு

சென்னை, ஓக. 17

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினின் மகனும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிக்கு எதிரான சனாதன வழக்குகளை வேறு மாநிலத்துக்கு மாற்ற முடியும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



சென்னையில் கடந்தாண்டு செப்.2-ம் தேதி தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய உதயநிதி, சனாதன தர்மம் சமூக நீதிக்கு எதிரானது என்றும், சனாதன தர்மத்தை டெங்கு, மலேரியா போல ஒழிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார். இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்பு வலுத்தது.

உதயநிதியின் இந்தக்கருத்துக்கு எதிராக உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஜம்மு - காஷ்மீர், பீஹார், கர்நாடகா என பல மாநிலங்களில் வழக்குகள் பதியப்பட்டன.

இந்த நிலையில், இந்த வழக்குகளை ஒன்றாக இணைத்து, தமிழகத்தில் விசாரிக்க உத்தரவிடக்கோரியும், இந்த வழக்குகளை இரத்துச் செய்யக்கோரியும் உதயநிதி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் சஞ்ஜீவ்கண்ணா, தீபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது உதயநிதி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், “சென்னையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் உரையாற்றியதற்காக பல்வேறு மாநிலங்களில் வழக்குகளைப் பதிவு செய்திருப்பது ஏற்புடையதல்ல. எனவே, பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த வழக்குகளை ஒன்றாக தமிழகத்தில், சென்னை உயர் நீதிமன்றம் விசாரிக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், உதயநிதிக்கு எதிரான இந்த வழக்கை தமிழகத்தில் விசாரிக்க அனுமதிக்க முடியாது. வேண்டுமென்றால் பெங்களூரு அல்லது தமிழகத்துக்கு வெளியே வேறு மாநிலத்துக்கு மாற்றலாம் என்று தெரிவித்தனர். (எ)

# “பட்டியலின சமூகத்தை சேர்ந்தவரை தமிழகத்தின் முதல்வர் ஆக்குவோம்”

விழுப்புரம், ஓக. 17

“பா. ம. கவுக்கு ஆதரவு வழங்கினால் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவரை முதல்வர் ஆக்குவோம்” என்று அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் உறுதியளித்துள்ளார்.

விழுப்புரம், திண்டிவனம் - கீழ்சிவிரி கிராமத்தில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் பட்டியலின சமுதாயம் பா. ம. கவுக்கு ஆதரவு வழங்கினால் பட்டியலின சமுதாயத்தைச் சேர்ந்தவரை முதல்வராக்குவோம். ஏற்கனவே பட்டியலினத்தைச் சேர்ந்தவரை 1998ஆம் ஆண்டிலேயே மத்திய அமைச்சராக்கியது பா. ம. க. தான். தி. மு. க. 1999ஆம் ஆண்டுதான் பட்டியலின சமுதாயத்தினருக்கு அமைச்சர் பதவி வழங்கியது. தி. மு. கவினர் அரசியல் காரணத்துக்காக சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தாமல் உள்ளனர்” என்றும் அன்புமணி கூறினார். (எ)

# ஆளுநர் ரவியின் தேநீர் விருந்தில் முதல்வர், அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, ஓக. 17

சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடந்த தேநீர் விருந்தில், தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கலந்து கொண்டார். அவருடன் சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர்களான துரைமுருகன், உதயநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)





மாமல்லபுரம் - திருவிடந்தை கடற்கரையில் 3ஆவது சர்வதேச பட்டத் திருவிழா நடைபெற்றது.

# ஒன்றிய அரசுக்கு ஸ்டாலின் நன்றி

சென்னை, ஓக. 17

கருணாநிதி நினைவு நாணய வெளியீட்டை முன்னிட்டு மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்து தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், “கருணாநிதி நினைவு நாணயத்தை வெளியிடும் இந்திய ஒன்றிய அரசுக்குத் தமிழ்நாட்டின் முதல்வராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மகனாகவும் என் நன்றியையும், தலைவர் கலைஞரின் கோடானு கோடி உடன்பிறப்புகளின் நன்றியையும் உங்களில் ஒருவனாக உரித்தாக்குகிறேன்.” என்று ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு சிலிண்டர் கிடைத்தது இறைவனின் ஆசீர்வாதமாகும்!

## கூறுகிறார் ஆசு மாரசிங்க

கொழும்பு, ஓக. 18

**"சமையல் எரிவாயு வரிசையை முடிவுக்கு கொண்டுவந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் தேர்தல் சின்னமாக கிடைத்திருப்பது இறைவனின் ஆசிர்வாதமாகும்" என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளளார்.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேர்தல் சின்னமாக "காஸ் சிலிண்டர்" சின்னத்தை தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த போதே ஆசு மாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டு மக்கள் சமையல் எரிவாயுக்காக வரிசையில் இருந்த சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப் பேற்றார்.

அத்துடன் எரிவாயு பிரச்னைக்கும் தீர்வை பெற்றுக்கொடுத்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த மகத்தான பணிக்கு இறைவனின் ஆசிர்வாதமாகவே அவருக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் தேர்தல் சின்னமாக கிடைத்திருக்கிறது.

சமையல் எரிவாயு வரிசையின் நினைவுகளுடன் சிலிண்டர் சின்னத்தை வெற்றிபெறச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மக்களுக்கு சமையல் எரிவாயு எந்தளவு முக்கியமோ அதேபோன்றே இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முக்கியமாகும். ரணில் இல்லை என்றால் சமையல் எரிவாயு இல்லை.

அந்தளவுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் மக்களின் இதயத்தில் இடம் பிடித்திருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க இல்லாமல் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது. எனவே ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்தில் எவ்வாறு சமையல் எரிவாயு வரிசை உள்ளிட்ட ஏனைய வரிசை யுகத்துக்கு தீர்வு கண்டிருந்தார்.

அதேபோன்று மக்கள் தற்போது எதிர்கொண்டுவரும் பொருளாதார சுமைக்கும் தீர்வு காண்பார் என நம்பிக்கை உள்ளது. அதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒருசில வேலைத்திட்டங்கள் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் பயனாகவே அஸ்வெசும போன்ற நிவாரண திட்டங்களை வழங்கி வருகிறோம். ரணில் இல்லாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்பதை மக்கள் தேர்தலில் காட்டுவார்கள்-என்றார்.



# வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலகம் புதிய இடத்தில் திறந்து வைப்பு!

வவுனியா, ஓக. 17

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலகமானது வவுனியா மன்னர் வீதியில் நேற்று புதிய அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் வவுனியா வெளிவட்ட வீதியில் இயங்கி வந்த நிலையில் இடவசதி மற்றும் பொதுமக்களின் வசதி கருதி குறித்த இடத்தில் தொடர்ச்சியாக அலுவலகத்தை நடத்த முடியாத காரணத்தினால் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான மன்னார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் நேற்று அலுவலகம் புதிதாக திறந்து வைக்கப்பட்டது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிடிய மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ சரத் சந்திர தலைமையில் குறித்த கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 24 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்ட குறித்த கட்டடமானது குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் புதிய அலுவலகமாக நேற்று முதல் செயற்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் பெண்ணின் மரணம்; சுகாதார அமைச்சுக்கு கடிதம்!

மன்னார், ஓக. 18

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த பட்டதாரி பெண் மரியராஜ் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் அந்த வைத்தியசாலையின் மருத்துவ ஆலோசகர்கள் குழுவினால், சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மரியராஜ் சிந்துஜாவின் மரணம் தொடர்பில் தாம் ஆழ்ந்த கவலை அடைவதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சில பணியாளர்களின் கவனயீனத்தால் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இச் சம்பவத்தில் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய துறைசார் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான சுகாதார அமைச்சின் முடிவை தாம் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# அதலபாதாளத்திற்கு இட்டுச்சென்றுள்ள நிலைமையே நாட்டில் காணப்படுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 17

நாடு தற்போது இயல்பு நிலையில் இருப்பதாக ஜானாதிபதி கூறினாலும், நாட்டில் உருவாகியிருப்பது புதியதொரு இயல்பு நிலையாகும். இதனால் நாட்டு மக்கள் தொழில்களை இழந்து, ஜீவனோபாயத்தினை இழந்து வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதன் காரணமாக மக்கள் பெரும் கவலையில் இருக்கின்றனர். மக்களின் நுகர்வு, முதலீடு, சேமிப்பு மற்றும் உற்பத்தி ஆகியவை இல்லாமால் போயுள்ள காரணத்தினால் நாட்டின் ஏற்றுமதி பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இக்காரணத்தால் நாட்டின் புதியதொரு இயல்புநிலை உருவாகியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மக்களின் வாழ்வாதாரத்தை குறைத்து , பணத்தினை சட்டைப் பைகளில் அடைத்து, செலவழிக்க முடியாதொரு நிலை உருவாகியுள்ளது. நாட்டை நாசமாக்கி, அதலபாதாளத்திற்கு கொண்டுசென்றுள்ள ஒரு சாதாரண நிலையே நாட்டில் நிலவி வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கண்டி மல்வத்தை மற்றும் அஸ்கிரி பீட மகா நாயக்க தேரரை சந்தித்து ஆசிர்வாதம்



பெற்றுக் கொண்டதன் பிற்பாடு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களின் தோள்களில் சுமக்க முடியாத அளவிற்கு சுமை ஏற்றப்பட்டு, இயல்பு நிலை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பல்வேறுபட்ட முட்டாள்தனமான, நாட்டு மக்களை ஏமாற்றும் கருத்துகளை முன்வைப்பவர்களுக்கு, நாம் பதிலளிக்க மாட்டோம் என்றும் இதன்போது எதிர்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் பார் உரிமம் வழங்குதல், ஏலம் மற்றும் மானியம் வழங்குதல் போன்ற கலாச்சாரங்கள் எம்மிடம் இல்லை. வாரிசு முறையில் அன்றி , 220 இலட்சம் மக்களின் வாக்குகளால் தான் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மதுபானம் இல்லாத யுகமொன்றை உருவாக்க முயற்சிப் போம். அரசியல் சூதாட்ட முற்றாக நிறுத்தப்படும் என்றும் எதிர்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

பொருளாதார மறுசீரமைப்பு என்று மக்கள் மீது எல்லையற்ற சுமைகளை சுமத்தி சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

துன்பப்படும் நாட்டு மக்களை, துன்பங்களில் இருந்து விடுவித்து, நாட்டை அபிவிருத்தி செய்யும் அனைவருக்கும் சுபிட்சம் தரும் உயர்ந்த கலாசாரமும், நாகரீகமான சட்ட ஒழுங்கும் கொண்ட ஒரு நாடு உருவாக்குவோம் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வ மதத் தலைவர்களும் கூறும் சிறந்த அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு, நாகரீகமான நாட்டைக் கட்டியெழுப்புவேன். பல ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, 220 இலட்சம் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை தான் வழங்கியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

(அ)

# மக்கள் சிரமத்துக்கு உள்ளாகாமல் கடவுச்சீட்டு வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 18

"மக்கள் சிரமத்திற்கு உள்ளாகாத வகையில் கடவுச்சீட்டுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு" குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

புதிய குடிவரவு சட்டமூலத்தை பரிசீலிப்பதற்கு, வெளிப்படையான மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் முன்னிலையில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அழைக்கப்பட்டிருந்த போதே இந்த அறிவித்தல் வழங்கப்பட்டது.

இதன்போது இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும், ஒக்ரோபபர் மாத இறுதிக்குள் 50 இலட்சம் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேர்தல் விதிமுறைகள் கடுமையாக்கப்படும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தேர்தல் விதிமுறைகள் கடுமையாக அமுல்படுத்தப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்

இத்திட்டமானது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வாக்களிப்பு முடியும் வரை அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வன்முறைகளை தடுக்க பொலிஸாருக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சமூக வலைதளங்களில் பொய் பிரசாரம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லை!

## அமைச்சர் கீதா வருத்தம்

கொழும்பு, ஓக. 18

**ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் பெண்களின் பிரதிநிதித்துவம் வழங்கப்படாமை மிகவும் வருத்தமளிக்கும் விடயம் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் கூட பெண்களுக்கு உரிய இடமும் சமமான இடமும் வழங்கப்பட வேண்டும் என கட்சித் தலைவர்கள் பெருமையுடன் கூறினாலும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நாட்டில் பெண் உரிமைகள் தொடர்பில் அனைத்து கட்சித் தலைவர்களும் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனவும், இம்முறை பெண் பிரதிநிதித்துவம் இல்லாத ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் துடுப்பு இல்லாத படகு போன்றது எனவும் அமைச்சர் கீதா குமாரசிங்க மேலும் கூறினார். (அ)

# எம்.பிக்களுக்கு மேலதிக துப்பாக்கியை வழங்குவதற்கான விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஓக. 17

ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகளை வழங்குவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விண்ணப்பங்களை கோருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிர் பாதுகாப்பிற்காக கைத்துப்பாக்கிக்கு மேலதிகமாக ரிப்பீட்டர் ரக துப்பாக்கியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சு கூறியுள்ளது.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகளை வழங்க முடியுமென பாதுகாப்பு அமைச்சினால் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீரவிடம் வினவிய போது, தற்போது 5 பாராளுமன்ற உறுப்பினர்களால் ரிப்பீட்டர் ரக துப்பாக்கிக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கட்டணம் அறவிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கிகளை வழங்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# அரியநேத்திரனுக்கு வாக்களிக்கவேண்டும்

## விக்னேஸ்வரன் கோரிக்கை

கொழும்பு, ஓக. 18

தமிழ் மக்களின் அடையாளமாக விளங்கும் பா.அரியேத்திரனுக்கு அனைத்து தமிழர்களும் வாக்களிக்க வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் வேட்பாளர் விவகாரத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுக்காமல் இருப்பது கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு விரைவான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தமிழ் பொது வேட்பாளரான பா.அரியேத்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறார். ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் சிந்திக்காமல் தமிழ் மக்கள் சார்பில் சிந்திக்க வேண்டும் என்பதுடன், இதற்கான கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சி ரீதியில் முரண்பட்டுக் கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்பதுடன், தமிழ் மக்களின் அடையாளமாக பா.அரியேந்திரனை 89 கட்சி தரப்பினர் தேர்ந்தெடுத்துள்ளார்கள் எனவும், இனி அவரை பற்றியோ, அவரின் கட்சி பற்றியோ பேசுவது அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றதாக வெளிப்படையாக தெரிவிப்பதாகவும், ஆனால் ஒரு சிறுபான்மை தரப்பினர் இதனை தடுப்பதாகவும் அவர் கூறினார்.

ஆகவே இவர்கள் தமது முரண்பாடுகளை விட்டு விட்டு தமிழ் வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும் என கோரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ரணிலுடன் இணைந்தார் அலி ஸாஹிர் மௌலானா

கொழும்பு,ஓக. 17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனது ஆதரவை உறுதி செய்துள்ளார்.



# குமார வெல்கம, பௌசி ஜனாதிபதிக்கு ஆதரவு!

கொழும்பு, ஓக. 17

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம மற்றும் பௌசி ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இயலும் ஒன்றிணைவு நிகழ்வில் பங்கேற்று அவர்கள் ஜனாதிபதிக்கான ஆதரவை உறுதிப்படுத்தினர். உடன் படிக்கையிலும் கைப்பற்றினர்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு கடந்த பொதுத்தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் இரு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. ராஜித, வெல்கம ஆகியோர் வெற்றி பெற்றிருந்தனர். அவர்கள் இருவரும் தற்போது ரணிலுடன் இணைந்துள்ளனர்.

# படைப்பாளிகளுக்கு அரசால் அச்சுறுத்தல்

## தீபச்செல்வன் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கடிதம்!

முல்லைத்தீவு, ஓக. 17

இலங்கையில் தன்னைப் போன்ற படைப்பாளிகளுக்க அரசாங்கம் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள இலங்கை தமிழ் எழுத்தாளர் தீபச்செல்வன் அறிவு வெளிப்பாடு மீதான ஒடுக்குமுறையை தடுக்குமாறு யுனஸ்கோ மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரி அஸூலே மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னஸ் காலமர்ட் ஆகியோருக்கு இலங்கை எழுத்தாளர் தீபச்செல்வன் கடிதங்களை எழுதியுள்ளார்.

இக் கடிதங்களின் பிரதிகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் ஆகியோ ரிடம் கையளித்தார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நான் இலங்கையை சேர்ந்த ஒரு தமிழ் எழுத்தாளன். கிளிநொச்சியை பிறப்பிடமாகக் கொண்ட நான், போர்ச் சூழலில் பிறந்து வளர்ந்து பல்கலைக்கழகக் கல்வியை முடித்து தற்போது ஒரு பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றேன்.

போர் நடைபெற்ற காலத்தில் அதன் விளைவாக நான் ஒரு எழுத்தாளனாக வெளிப்பட்டேன். போரின் துயரங்களையும் போரில் என்னைச் சார்ந்த சமூகம் எதிர்கொள்ளும் உரிமை மறுப்புக்களையும் எழுத உந்தப்பட்டேன். புகழ், வருமானம் போன்ற நோக்கங்கள் இல்லாமல் மனித உயிர்கள் அழிக்கப் பட்டும் எனது தேசத்தில் இல்லாமல் ஆக்கப்படுபவர்களின் மனசாட்சியாய் இறுதிக்குரலாய் என் எழுத்துகள் வெளிப்பட்டன.

"பதுங்கு குழியில் பிறந்த குழந்தை" என்பது 2008ஆம் ஆண்டில் வெளியான என் முதல் கவிதை நூல். உரிமைக்கான போராட்டத்தில் தன் பிள்ளையை இழந்த தாய் அவன் நினைவுகளுக்காக முன்னெடுக்கும் வாழ்வையும் போராட்டத்தையும் பேசுவது நடுகல் என்ற என் முதல் நாவல். போரில் தாய் தந்தையை இழந்து தப்பும் ஒரு குழந்தை எந்தச் சூழலிலும் கல்வியைக் கைவிடாது பல்கலைக்கழகம் சென்று அங்கு மாணவத் தலை வராகிய நிலையில் அரச படைகளால் அவன் கொல்லப் படும் கதையைப் பேசுவது பயங்கரவாதி என்ற என் இரண்டாவது நாவல்.

பயங்கரவாதி என்ற எனது இரண்டா வது நாவல், விடுதலைப் புலிகள் இயக் கத்தை மீள் உருவாக்கம் செய்கிறதா என்ற கோணத்தில் இலங்கை அரசின் பயங்கரவாத தடுப்புப் பிரிவு என்னிடம் கடந்த ஜூன் மாதம் விசாரணையை மேற்கொண்டது. சுமார் இரண்டு மணி நேரம் இந்த விசாரணை நடந்தது. இதற்கு முன்பு நான் தலைமை தாங்கி நடாத்திய ஒரு புத்தக வெளியீட்டுக்காகவும் மூன்று மணிநேரம் விசாரணையை பயங்கரவாத தடுப்புப் பிரிவு மேற் கொண்டது.

என் நாவலில் வரும் கதா பாத்திரங்கள் உண்மையானவையா? பிரதான கதாபாத்திரமாக வரும் மாறன் என்பவர் யார்? அவர் எங்குள்ளார் என விசாரணை நடத்தப்பட்டது. இலங்கையில் கடந்த காலத்தில் பல எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கருத்துச் சுதந்திரத் தின் மீது இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்பட்டது. இந்த நிலையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் விசாரணை என்னையும் என் குடும்பத்தினரையும் மாத்திரமின்றி என்னைப் போன்ற படைப்பாளிகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் நடந்த மேலாதிக்கத் திற்கான போர் மற்றும் உரிமைக்கான போராட்டத்தில் சந்தித்த இழப்புக்கள், தியாகங்கள், அனுபவங்கள் குறித்து இலக்கியங்கள் எழுதுவது இந்த தீவின் எதிர்கால அமைதிக்கும் சுபீட்சத்திற்கும் அவசியமானது. உலகின் எந்தவொரு தேசத்திலும் எழும் படைப்புக்களும் இலக்கியங்களும் உலக மக்கள் அனை வருக்குமான அறிவு மற்றும் படைப் பாக்கச் சொத்தாகும். அந்த வகையில் வரலாற்றினதும் கடந்த கால கசப்பக்களி னதும் விளைவாக எழும் இலக்கியங் களை தடுக்க முற்படுவது அறிவுவெளிப்பாடு மீதான ஒடுக்குமுறையுமாகும்.

பொருளாதார நெருக்கடி போன்ற சூழலிலும் தமிழ் சிறுபான்மை எழுத்தா ளர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 15 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் இத்தகைய செயற்பாடுகளை தடுக்க தாங்கள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கைத் தீவின் கலாசார பண் பாட்டு மற்றும் படைப்புக்கள் மீது மிகுந்த மதிப்பும் கரிசனையும் கொண் டுள்ள தங்களின் கவனம் இலங்கைத் தீவில் எழுத்தாளர்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதுடன் தமிழ் பேசும் மக்களின் இருப்பையும் சுதந்திரத்தையும் காத்து நிற்கும் என்றும் எதிர்பார்த்து வேண்டி நிற்கின்றேன் - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மக்கள் பெரும்பான்மையாக வாழும் மருதங்கேணி எல்லைகளை அபகரிக்க சதி

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 17

**வடமராட்சிக் கிழக்கின் நிர்வாக தலைமையிடமாக இருக்கும் வரலாற்றுப் பாரம்பரியமிக்க மருதங்கேணி கிராமத்தின் எல்லைகளை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராக மருதங்கேணி மக்களுக்கும் பொது அமைப்புக்களும் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.**

மருதங்கேணி கிராம சேவகர் பிரிவில் இருந்து தனி கிராம சேவகர் பிரிவாக தங்களை அடையாளப்படுத்த வேண்டும் என்று வடமராட்சிக் கிழக்கின் தாளையடி கிராம மக்கள் கோரியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைக்கு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தாளையடி மக்களின் தனி உரிமை சார்ந்து அவர்களின் தனிக் கிராமக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தாளையடி கிராமம் என்பது, கத்தோலிக்க மதத்தினர் வாழும் பகுதியாகும். அதன் நிலப்பரப்பு மிகவும் சிறியது. தற்போது, அங்கு 141 குடும்பங்களே வாழ்ந்து வருகின்றனர். ஆனால், தாளையடியை தனிக் கிராமமாக மாற்றும் முயற்சிகளின் போக்கில், மருதங்கேணியின் பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகளை, வடமராட்சிக் கிழக்கின் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தியும் இன்னும் சில தரப்பினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர் என பிரதேசவாசிகள் குற்றம்சுமத்துகிறார்கள்.

இது தொடர்பில் மருதங்கேணி பிரதேச மக்கள் தெரிவிக்கையில்-

மருதங்கேணி கிராமத்தில் 95 வீதமான மக்கள் சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள். அவர்களின் கோவில்கள், வளவுகள், வயல்கள், கடற்கரை உள்ளிட்ட பெரும் பகுதிகளையும் ஆக்கிரமித்து தான்தோன்றித்தனமாக எல்லைகளை வரையறுத்து தாளையடியாக அறிவிக்கும் வகையிலான கடிதமொன்றை, வடமராட்சிக் கிழக்கின் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளருக்கு எழுதியிருக்கின்றார். கடந்த யூலை மாதம் 07ஆம் திகதி குறித்த கடிதத்தை அவர் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகள் தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்தவித கலந்துரையாடல்களையும் செய்யாது, இரகசியமான முறையில், பிரதேச செயலாளர் எல்லைகளை வரையறை செய்துள்ளார்.

இந்த சதி முயற்சிக்கு எதிராக மருதங்கேணி மக்கள் வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகத்தின் முன்னால், தொடர்ச்சியாக இரு நாட்கள் போராட்டங்களை நடத்தினார்கள். அப்போது, பிரதேச செயலாளர், தாளையடி கிராமத்துக்கான எல்லைகளை வரையறுத்து தான் எந்தவித கடிதங்களையும் மாவட்டச் செயலாளருக்கு எழுதவில்லை என்று பொய் கூறினார். ஆனால், அவர் எழுதிய கடிதத்தின் பிரதிகளை, மருதங்கேணி மக்கள் அவரிடம் காண்பித்து விளக்கம் கோரிய போது, அவர் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டார். இந்த அதிகார துஷ்பிரயோகம் பாரம்பரிய சிறப்பு மிக்க மருதங்கேணியின் மீது விடுக்கப்படும் பெரும் அச்சுறுத்தலாகும்.

மருதங்கேணி கிராம எல்லைக்குள், வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகம், பிரதேச வைத்தியசாலை, பொது விளையாட்டு மைதானம் போன்ற முக்கிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. ஆனால், தாளையடி கிராமத்துக்கான எல்லையையாக, தான்தோன்றித்தனமாக பிரதேச செயலாளர் குறித்துள்ள எல்லைகள் மருதங்கேணிக்குள் இருக்கும் மேற்கண்ட முக்கிய நிறுவனங்கள், மற்றும் பிரதேசங்களையும் தாளையடியாக அறிவிக்கும் நோக்கிலான கபடத்தனத்தை கொண்டிருக்கின்றது.

தாளையடி தனிக் கிராமத்துக்கான எல்லை வரையறை தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்தவித கலந்துரையாடலும் பிரதேச செயலகத்தினாலோ, எல்லை வரையறை தொடர்பிலான பிரிவினராலோ மேற்கொள்ளப்படவில்லை. மருதங்கேணி மக்களுக்கு தெரியாமல், மறைமுகமாக மருதங்கேணியின் பெரும் நிலப்பகுதியை அபகரித்து புதிய கிராமமாக அறிவிக்கும் நோக்கமே, பிரதேச செயலாளரிடத்திலும், அவரோடு இணைந்து இவ்வாறான சதி முயற்சிகளில் ஈடுபடுவோரிடத்திலும் காணப்படுகின்றது. இந்த சதி முயற்சிகளை உடனடியாக நிறுத்துமாறு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புக்களும் வலியுறுத்துகின்றன.

மருதங்கேணி மக்கள் மத சார்பின்மையோடு சமத்துவமும் சகோதரத்துவமும் கொண்ட வாழ்க்கை நெறியைக் கொண்டவர்கள். அவர்களை, தாளையடி கிராமத்து மக்களோடு முரண்பட்டு மோத வைக்கும் வகையிலான சதித் திட்டமும் மருதங்கேணி கிராமத்தின் நிலப்பகுதிகளை அபகரித்து தாளையடியாக அறிவிக்கும் சதித்திட்டத்தின் பின்னால் இருப்பதாக மருதங்கேணி மக்கள் அச்சப்படுகின்றனர். இவ்வாறான சதி நடவடிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ஆகியோர் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோருகிறோம்.-என்றனர்.

(அ)



# புதுக்குடியிருப்பில் புலிகளின் புதையலை தேடி அகழ்வு பணி

முல்லைத்தீவு, ஓக. 17

யுத்த காலத்தில் விடுதலை புலிகள் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியிலுள்ள தனியார் காணியில் நேற்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு, பொலிஸார், இராணுவத்தினர், கிராம சேவையாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் இணைந்து அகழ்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி தர்மலிங்கம் உத்தரவிட்டார்.

# இலங்கை மின்சார சபையில் உள்ளக சீரமைப்பு அவசியம்!

## வலியுறுத்துகிறார் அநுரகுமார

கொழும்பு, ஓக. 17

இலங்கை மின்சார சபையில் உள்ளக மறுசீரமைப்பு அவசியம் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரத்துறை தொடர்பில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மின்சாரத்துறையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் நிலவுகின்றன.

அதனை நிவர்த்திக்க வேண்டுமாயின் உள்ளக மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக இலங்கை மின்சார சபையை மாற்ற முடியும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

(அ)

# இளைஞன் மரணத்துக்கு நீதி கோரி மல்லாவியில் நேற்று ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி, ஓக. 17

இளைஞனின் மரணத்துக்கு நீதி கோரி மல்லாவிப் பகுதியில் பொதுமக்கள் ,பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தகர் சங்கம் என்பன இணைந்து பாரிய அளவிலான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நேற்று வெள்ளிக்கிழமை காலை மேற்கொண்டன.

கனடா செல்ல தயாரான மல்லாவி யோகபுரம் பகுதியினைச் சேர்ந்த ஆனந்தராசன் சஜீவன் என்ற இளைஞன் கடந்த 29 ஆம் திகதி காணாமல்போன நிலையில் மல்லாவி வவுனிக்குளம் பகுதியிலிருந்து மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார்.

19 நாட்களாகியும் குறித்த இளைஞனின் மரணத்திற்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன் , பொலிஸாரின் விசாரணைகள் மந்த கதியில் நடப்பதாக கூறியும், துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று கோரியும் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் நேற்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மல்லாவி மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகிய பேரணி மல்லாவி போலிஸ் நிலையம் வரை சென்றிருந்தது.

பின்னர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஒன்று கூடி,

'சஜீவன் மரணத்திற்கு நீதி வேண்டும்', 'கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்து' , 'விசாரணைகளை துரிதப் படுத்தி நீதியை பெற்று தா' , "எமது நண்பனின் மரணத்திற்கு நீதி வேண்டும்' , 'வஞ்சகரின் சூழ்ச்சிக்கு முடிவில்லையா' , 'எமது பிள்ளைக்கு நீதி வேண்டும்' போன்ற எதிர்ப்பு சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் கோஷமிட்டனர்.

இதேவேளை, குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று மல்லாவி பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தமையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மல்லாவி பொலிஸ் நிலையம் முன்பு ஒன்று கூடி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை, சம்பவ இடத்துக்கு வருகை தந்த மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் [illegible] இளைஞனின் படுகொலைக்



கான நீதியினை தான் பெற்று தருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டிருந்தவர்களிடம் தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதிக்குள் துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தாவிடின் பாரியளவிலான போராட்டம் ஒன்றை தாம் மேற்கொள்வோம் என்றும், சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தினையும் தாம் முன்னெடுப்போம் என்றும் எச்சரித்து, பொலிஸ் பொறுப்பதிகாரியிடமும்,வருகை தந்திருந்த பாராளுமன்ற அரசியல் பிரமுகர்களிடமும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 வயது இளைஞன் சுட்டுப் படுகொலை

## திருகோணமலையில் பயங்கரம்

திருகோணமலை, ஒக. 17

**திருகோணமலையில் வயல் காவலில் ஈடுபட்ட 26 வயது இளைஞன், ரி - 56 ரக துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

திருகோணமலை, சிறீ புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்மம்பில கிராமத்தில் பிள்ளையார் கோவில் சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காவந்திஸ்ஸ, சிறீ புர பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞனே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வயல் காவலில் ஈடுபட்டிருந்த நிலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், அவர் மீது மூன்று முறை ரி- 56 ரக துப்பாக்கியால் சுட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்ததாக சிறீ புர பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறீ புர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் டுபாயில் இருக்கும் போதைப் பொருள் கும்பலுக்கு தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)



# கல்வி அதிகாரிகளுக்கு புதிய அடையாள அட்டை

சம்மாந்துறை, ஒக. 17

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக கல்வி சார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இந்த அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் தலைமையில் பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# தென்கிழக்கு பல்கலை. கலைப்பீட பீடாதிபதியாக பாஸில் மீள தெரிவு

கல்முனை, ஒக. 17

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பப் பீடங்களுள் ஒன்றாக விளங்கும் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் கலாநிதி எம். எம். பாஸில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்யும் கூட்டம் பதில் துணைவேந்தர் யூ. எல். அப்துல் மஜீட் தலைமையில் பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் உயர் சபை உறுப்பினர்கள், பதில் பதிவாளர் எம். ஐ. நௌபர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம். ரீ. அஹமட் அஷ்ஹர் மற்றும் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் ஏ. ஆர். எம். சுல்பி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி வெற்றிடத்துக்காக பேராசிரியர் பாஸில் போட்டியிட்டிருந்தார். இதில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பேராசிரியர் பாஸில் மீண்டும் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.



பேராசிரியர் பாஸில், கடந்த 2021. 08. 16 ஆம் திகதி எட்டாவது பீடாதிபதியாக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், கலை கலாசார பீடத்தின் பழைய மாணவரான பேராசிரியர் எம். எம். பாஸில், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அந்தப் பீடத்தின் பீடாதிபதியாக மீண்டும் செயல்படவுள்ளார். (எ)

# விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா





கல்முனை, ஒக. 17

கல்முனை மாமாங்க வித்தியாலயத்தில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்திய அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் பாடசாலையின் அதிபர் எஸ். புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைதீவு விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்ற ஆலோசகரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி. ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

மேலும், கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் இந்து சமய பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ம. லக்குணம், சைவப் புலவர், வளவாளர் ஜே. கஜேந்திரா, வளவாளர் நா. சனாதனன், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப் படங்களை விருந்தினர்கள் வழங்கினர். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சுவாமிகளின் படங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடரின் ஏழாவது பாடசாலை நிகழ்வு இதுவாகும். (எ)

# பாடசாலையின் சுற்றுச்சூழலை அழகுபடுத்தும் திட்டம் ஆரம்பம்

கல்முனை, ஒக. 17

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சுற்றுச்சூழலை அழகுபடுத்தும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையின் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் சீராக இடம்பெறுவதற்கு வெளிச்சூழலும் சுத்தமாகவும் சுகாதாரமாவும் அழகாகவும் இருக்க வேண்டும் என்பதற்கிணங்க பாடசாலை அதிபர் ஏ. ஜி. எம். ரிஷாத்தின் வழிகாட்டலில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையை கவின்கலை உடையதாக அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தின் மூன்றாவது பகுதியின் செயல்பாடுகள் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இதனடிப்படையில், அவங்கார மரக்கன்றுகளை நடும் ஒரு பகுதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு சம்பியன்

காத்தான்குடி, ஒக. 17

காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு சம்பியனானது.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிரிக்கெட் அணிகள் பங்கு பற்றிய இதன் இறுதிப் போட்டியில் புதிய காத்தான்குடி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு கிரிக்கெட் அணியும், புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு கிரிக்கெட் அணியும் கலந்து மோதின.

இதில் புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு கிரிக்கெட் அணி வெற்றி பெற்றது.

இதன் பரிசளிப்பு விழா காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயசிறிதர் தலைமையில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தனுஜா, கணக்காளர் சித்திரா உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது வெற்றி பெற்ற கழகங்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டதுடன், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் பாதுகாப்பு குறித்து 140 கோடி மக்கள் ஆழ்ந்த கவலை

## செங்கோட்டையில் இந்திய பிரதமர் மோடி



புதுடில்லி, ஒக. 17

**"அண்டை நாடான பங்களாதேஷில் குழப்பமான சூழல் நீடிக்கிறது. அந்த நாட்டில் வசிக்கும் இந்துக்களின் பாதுகாப்பு குறித்து பாரதத்தின் 140 கோடி மக்களும் கவலையில் ஆழ்ந்துள்ளனர். பங்களாதேஷில் விரைவில் அமைதி திரும்ப வேண்டும்"- இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.**

டில்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் தேசிய கொடியேற்றி சுதந்திர தின உரையாற்றினார். இதன்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மதச்சார்பற்ற சிவில் சட்டங்கள் அவசியம் என்றும் அவர் உறுதி படக் கூறினார்.

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப் பட்டது. பிரதமர் நரேந்திர மோடி டில்லி செங்கோட்டையில் தொடர்ச்சியாக 11ஆவது முறை தேசியக் கொடியேற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

1,500 இற்கும் மேற்பட்ட பழமையான சட்டங்கள் ஒழிக்கப்பட்டு, புதிய குற்றவியல் சட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளன.

வேளாண் துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. தற்போது விவசாயிகளுக்கு எளிதாக கடன் கிடைக்கிறது. அவர்களுக்கான சந்தை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன. உலகத்தின் இயற்கை வேளாண்மை உற்பத்தி மையமாக பாரதத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ளோம்.

நாட்டின் சில இடங்களில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் மனதை காயப்படுத்துகிறது. இத்தகைய குற்றங்களுக்கு எதிராக சமானிய மக்கள் கோபத்தில் கொந்தளிக்கின்றனர். நானும் அதே உணர்வில் இருக்கிறேன். பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க மாநில அரசுகள் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கொடூர குற்றம் இழைப்பவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கலாம்.

ஒரு காலத்தில் ஆயுதங்களை இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். இப்போது ஆயுதங்களையும் பாதுகாப்பு தளவாடங்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். இந்த துறையில் ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

உலக நாடுகளை ஒப்பிடும் போது பாரதத்தில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்த வாய்ப்பை பயன் படுத்தி தொழில் துறையில் அபார வளர்ச்சி அடைய வேண்டும். உலகின் மிகப்பெரிய நிறுவனங்கள் பாரதத்தில் முதலீடு செய்து வருகின்றன அந்நிய முதலீடுகள் பெருக்‌ ால், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும்.

வாரிசு அரசியல், சாதி அரசியல் நாட்டின் ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக எழுந்துள்ளன.

நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதில் அரசமைப்பு சாசனம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஏழை, எளிய மக்கள், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோரின் பாதுகாவலனாக அரசமைப்பு சாசனம் விளங்குகிறது.

ஹஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டத்தை செயல்படுத்த செங்கோட்டையில் இருந்து அழைப்பு விடுத்தேன்- என்றார்.

(எ)




# பாலியல் வன்முறையின் பின் பெண் மருத்துவர் படுகொலை

## ஆயிரக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்டம்

கொல்கத்தா, ஒக. 17

கொல்கத்தா அரச மருத்துவமனையில் பெண் மருத்துவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கான பெண்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

சமூக ஊடகங்களின் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை தொடர்ந்து சமூகத்தின் அனைத்து தரப்பையும் சேர்ந்த பெண்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் ஏனைய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இதேவேளை கொல்கத்தாவில் பொலிஸாருக்கும் சிறிய குழுவினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

பாலியல் வன்முறை சம்பவம் இடம்பெற்ற மருத்துவமனைக்குள் புகுந்த சிலர் மருத்துவமனையின் அவசரசேவை பிரிவை சேதப்படுத்தினர். (எ)

# ஆஸி. மைதான திரையில் இந்திய தேசியக் கொடி



மெல்பேர்ன், ஒக. 17

சீனா, இலங்கை, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, நேபாளம் உட்பட உலகம் முழுவதும் இந்திய சுதந்திர தின கொண்டாட்டம் நடைபெற்றது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் உள்ள திரையில் இந்திய தேசியக் கொடி காட்சிப்படுத்தப்பட்டது. (எ)

# ஐரோப்பாவில் விரைவில் குரங்கம்மை பரவக்கூடும்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

ஸ்டாக்ஹோம், ஒக. 17

ஐரோப்பாவில் விரைவில் குரங்கம்மை நோய் பரவக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

குரங்கம்மையை சர்வதேச சுகாதார அவசரகால நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்திந்தது. இந்த நிலையிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குரங்கம்மை என்பது ஒரு வகை வைரஸால் ஏற்படக் கூடிய தொற்று நோயாகும். ஆபிரிக்காவில் நடப்பு ஆண்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் என 13 நாடுகளில் குரங்கம்மை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை 524 பேர் பலியாகினர். 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஆபிரிக்காவுக்கு வெளியே முதன்முறையாக சுவீடன் நாட்டில் குரங்கம்மை நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வைரஸானது, கிளாட் 1 என்ற வகையை சேர்ந்தது.

இதுபற்றி உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய மண்டலத்துக்கான அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுவீடனில் கிளாட் 1 வைரஸின் பரவலானது, நம்முடைய உலகில் ஒன்றோடொன்று நாம் தொடர்பில் இருக்கிறோம் என்பதற்கான தெளிவான எடுத்துக்காட்டாகும்.

எதிர்வரும் நாட்களில் மற்றும் வாரங்களில் ஐரோப்பிய பகுதிகளில் கிளாட் 1 பரவல் அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)



# "ரஷ்ய படையினரை மனிதாபிமான ரீதியில் நடத்தும் உக்ரைன்"

கீவ், ஒக. 17

கைது செய்த ரஷ்ய படையினரை மனிதாபிமான ரீதியில் நடத்துகின்றோம் என்றும் ரஷ்யாவிடம் ஒப்படைப்பது குறித்த பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம் எனவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் உக்ரைன் படை ணயினர் சிறைபிடித்த ரஷ்யாவின் போர் கைதிகள் குறித்து ரஷ்ய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் மனித உரிமைகளுக்கான உக்ரைனின் பாராளுமன்ற ஆணையாளர் டிமிட்ரோ லுபினெட்ஸ் தெரிவித்தார்.

நீங்கள் ரஷ்ய படையினர் சரணடைவதை பார்த்திருப்பீர்கள். உக்ரைன் படையினர் ஜெனிவா சாசனத்தின் படி போர் கைதிகளை கையாள்வதை பார்த்திருப்பீர்கள். ரஷ்ய படையினரின் யுத்த கால உரிமைகளை உறுதி செய்வதை பார்த்திருப்பீர்கள் என்றும் அவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட ரஷ்ய படையினர் எவரும் சித்திரவதை செய்யப்படவில்லை. ஆனால், ரஷ்ய படையினர் அதனை செய்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# இஸ்ரேல் - ஹமாஸ் சமரசம் அமெரிக்கா, கட்டார் மும்முரம்

ஜெருசலேம், ஒக. 17

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடித்து வரும் போரால் காஸாவில் 40, 000 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர் இந்த நிலையில் இரு தரப்பினர் இடையே போர் நிறுத்த பேச்சுகளை நடத்தும் நடவடிக்கையில் அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் மும்முரமாக இறங்கியுள்ளன. இதேவேளை, காஸாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 11 குழந்தைகள் ஜோர்தானில் சிகிச்சை பெற இஸ்ரேல் அனுமதி வழங்கியது. குழந்தைகளுடன் பெண் ஒருவர் பாதுகாப்புக்குச் செல்லவும் அனுமதிக்கப் பட்டனர். (எ)

# ரஷ்யாவுக்குள் உக்ரைனின் புதிய இராணுவ அலுவலகம்

மொஸ்கோ, ஒக. 17

ரஷ்யாவின் மேற்கில் உள்ள கேர்ஸ்க் பிராந்தியத்துக்குள் ஊருடுவியுள்ள உக்ரைன் படையினர் அங்கு தாம் கைப்பற்றியுள்ள பகுதிகளில் இராணுவ அலுவலகத்தை திறந்துள்ளதாக உக்ரைனின் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த அலுவலகம் சட்டம் ஒழுங்கை பேணுவதற்காகவும் மக்களின் உடனடி மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் திறந்துள்ளதாக உக்ரைனின் இராணுவ அதிகாரி கூறினார்.

இதேவேளை வியாழக்கிழமை தமது படைகள் மேலும் முன்னேறியுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

கேர்க்ஸ் பிராந்தியத்துக்குள் உக்ரைன் படையினர் உள்ளே முன்னேறியுள்ளனர். 12 குடியிருப்புகள் உட்பட 1500 சதுர கிலோ மீற்றரை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர் என ஜெனரல் சிர்ஸ்கி தெரிவித்தார்.

எனினும் ரஷ்யாவின் பகுதிகளை கைப்பற்றும் நோக்கம் இல்லை என தெரிவிக்கும் உக்ரைன், ரஷ்யாவை சமாதானத்துக்கு இணங்கச் செய்வதற்காகவே இந்த நடவடிக்கை என உக்ரைனின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசார நிதி எவ்வாறு கிடைத்ததென வேட்பாளர்கள் வெளியிட வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 17

**தேர்தல் பிரசாரத்துக்கான நிதி எப்படி கிடைக்கின்றது என்பது உள்ளிட்ட விவரங்களை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் வெளியிடவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

செப்ரெம்பர் 21 ம் திகதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செலவுசெய்யக்கூடிய பண வரம்வை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கவுள்ளது.

ஒவ்வொரு வேட்பாளரும் தங்களின் பிரசாரத்துக்காக எவ்வளவு செலவிடலாம் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கவுள்ளது. இந்தத் தீர்மானத்தை வேட்பாளர்கள் பின்பற்றவேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியாகி வெற்றி பெற்றவர் அறிவிக்கப்பட்டதும் தாங்கள் செலவிட்ட பணம் குறித்த விவரங்களை வெளியிடுவதற்கு அனைத்து வேட்பாளர்களுக்கும் 21 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் அறிக்கையை ஆராய்ந்து 10 நாட்களின் பின்னர் இணையத்தில் அது குறித்த வி5ரங்கள் வெளியிடப்படும். தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்ததற்கு அதிகமாக வேட்பாளர் எவராவது செலவுசெய்திருந்தால் அவருக்கு எதிராக பொதுமக்கள் நீதிமன்றம் செல்லலாம் - என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். (ஐ)




# யூசிமாஸ் தேசிய மட்டப் போட்டி; 19 மாணவர்கள் மெரிட் சாதனை!

யாழ்ப்பாணம், ஓக. 16

"யூசிமாஸ்" மனக் கணித தேசிய மட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூசிமாஸ் நிலையத்தை சேர்ந்த 23 மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

யூசிமாஸ் தேசிய மட்டப் போட்டி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலிருந்தும் 2 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில், கிராண்ட் சம்பியனை அகிலன் சுக்ரித், சம்பியனை மோ. ஹரிபிரதித் ஆகியோர் வென்றனர். அத்துடன், 19 மாணவர்கள் மெரிட் பரிசில்களை பெற்றனர். (ஐ)



# மகாநாயக்க தேரரிடம் சஜித்தும் ஆசீர் பெற்றார்!

கொழும்பு, ஓக. 17

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ மகாநாயக்க தேரரிடம் ஆசீர்வாதம் பெற்றார்.

நேற்று வெள்ளிக்கிழமை கண்டிக்கு சென்ற சஜித் பிரேமதாஸ தலதா மாளிகையில் வழிபாட்டார்.

தலதா மாளிகைக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவரை தியவதன நிலமே உள்ளிட்ட விகாரை பஸ்நாயக்க நிலமே ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர், மல்வதை பீடத்தின் சிறீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வராக்காகொடை சிறீ ஞானரத்ன தேரர் ஆகியோரையும் சந்தித்து ஆசீர்வாதமும் பெற்றார். தொடர்ந்து, மகாநாயக்க தேரர்கள் நடத்திய விசேட பிரித் பாராயணத்திலும் அவரும் அவரின் கட்சியினரும் பங்கேற்றனர். (ஐ)

# ஏ-9 வீதியில் விபத்து பாதசாரி ஒருவர் பலி!

கொழும்பு, ஓக. 17

ஏ- 9 வீதியை கடக்க முயன்றவரை கெப் வாகனம் மோதியதில் பாதசாரி ஒருவர் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் மாத்தளையில் இந்த விபத்து இடம்பெற்றது.

தம்புள்ளையிலிருந்து மாத்தளை நோக்கிப் பயணித்த கெப் வாகனம் வீதியை கடக்க முயன்ற பாதசாரியை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், படுகாயமடைந்த நபர் மாத்தளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருள் குற்றம் 685 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 17

நாடளாவிய ரீதியில் கடந்த நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் போதைப்பொருள் சார்ந்து 685 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 676 ஆண்களும் 9 பெண்களும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 23 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 6 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 225 கிராம் 49 மில்லி கிராம் ஹெரோயின், 281 கிராம் 323 மில்லி கிராம் ஐஸ், 6,388 கிராம் மில்லி 385 கிராம் கஞ்சா, 1,037 போதை மாத்திரைகள் மற்றும் 3,957 கஞ்சா செடிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# தம்புள்ளையில் யானையை சுட்டுக் கொன்ற பொலிஸார்!

கொழும்பு, ஓக. 17

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் யானை ஒன்று உயிரிழந்தது.

தம்புள்ளை - பக்கமூன பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுமார் 35 வயதுடைய எட்டு அடி உயரம் கொண்ட காட்டு யானையே உயிரிழந்தது.

பொலிஸார் முச்சக்கரவண்டியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அந்தச் சமயமே காட்டு யானையை அவர்கள் சுட்டுக்கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வனஜீவராசிகள் நடத்திய விசாரணையில் தமது பாதுகாப்புக்காகவே யானையை சுட்டுக் கொன்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தது. (ஐ)

# மாணவி பாலியல் வன்கொடுமை; ஆசிரியரும் அதிபரும் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 17

12 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய ஆசிரியரும் இந்த சம்பவத்தை மூடிமறைக்க முயன்ற அதிபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

மாத்தளை, மஹவெல பிரதேசத்தில் தரம் 7இல் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

52 வயதான ஆங்கில ஆசிரியர் பாடசாலை ஓய்வு அறையில் வைத்து மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவி இது தொடர்பில் சக மாணவி ஒருவருக்குத் தெரிவித்துள்ளார். இருவரும் இணைந்து பாடசாலையில் உள்ள ஆசிரியர் ஆலோசகர் ஒருவரிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

ஆசிரிய ஆலோசகர் இந்த சம்பவத்தை பாடசாலை அதிபரிடம் தெரிவிக்குமாறு மாணவிக்குக் கூறியுள்ளார்.

ஆனால், அதிபரோ இந்த சம்பவத்தை பெற்றோரிடமோ அல்லது வேறு எவரிடமோ தெரிவித்தால் பாடசாலையை விட்டு நிறுத்தி விடுவதாக மாணவியை மிரட்டியுள்ளார்.

எனினும், இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட மாணவி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# குளவி கொட்டி விவசாயி பலி!

கொழும்பு, ஓக. 17

அநுராதபுரம், பரசன்கஸ்வெவ பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பரசன்கஸ்வெவ , பலுகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த ஹெட்டி ஆராச்சிலாகே சுனில் என்ற 65 வயதுடைய விவசாயி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று, உயிரிழந்தவர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு மதியம் வீடு திரும்பியுள்ளார். பின்னர் தனது வீட்டில் உள்ள குளவிக் கூடு ஒன்றை உடைக்க முயன்றபோது குளவி கொட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்தவர் பரசன்கஸ்வெவ பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மலையக ரயில் தடம் புரள்வு!

கொழும்பு, ஓக. 17

மலையக மார்க்கத்திலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயில் தெமோதரை ரயில் நிலையத்துக்கு அருகில் தடம் புரண்டதன் காரணமாக மலையக மார்க்கத்திலான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரயிலை வழித்தடமேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருட்களுடன் இரு சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 17

ஹெரோயின் போதைப் பொருட்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் துனகஹ மற்றும் மினுவாங்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31 மற்றும் 39 வயதுடையவர்கள் ஆவர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரிடமிருந்து 20 கிராம் 315 மில்லி கிராம் ஹெரோயினும் மற்றவரிடமிருந்து 12 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இருவரையும் நீர்கொழும்பு பொலிஸார் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சி...

முஷாரப் எம். பி. வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட "இயலும் சிறீ லங்கா" கூட்டணியில் இணைந்துள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

பிரசாரத்தை ஆரம்பிப்பது வரலாற் றில் முதல் தடவையாகும் என கம்மன் பில கூறினார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு பாரம்பரிய தேர்தல் விஞ்ஞாபனத்துக்குப் பதிலாக மூலோபாய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர எனவும் கம்மன்பில மேலும் குறிப்பிட்டார். (அ)

## நாமல்...

வெற்றி பெறுவதற்கு முன்னரே பதவிகள் தொடர்பில் கட்சிக்குள் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. இந்தநிலையில், தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படுகின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பின்தள்ளும் முயற்சியிலேயே பொதுஜன பெரமுன இறங்கியுள்ளது.

எவ்வாறாயினும், புதிய ஆய்வுகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்னிலையில் உள்ளார்-என்றார். (அ)

## 34அரசியல்...

அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் சி. சந்திரகாந்தன் (பிள்ளையான்), இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன், ஈரோஸ் கட்சியின் செயலாளர் ரா. பிரபாகரன், அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ், ரிஷாத் பதியுதீன் கட்சியை சேர்ந்த எஸ். எம். எம். முஷாரப், அசாத் சாலி, அதாவுல்லா, ஏ. எச். எம். பௌசி, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க, அலி சப்ரி, சிறீ லங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, குமார வெல்கம, ராஜித சேனாரட்ன, ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தி வஜிர அபேவர்த்தன உள்ளிட்ட 34 தரப்பினர் இந்தப் புரிந்துணர்வில் நேற்று கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக - சிலிண்டர் சின்னத்தில் களமிறங்குகிறார். இது அவரின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான அவர் கடந்த 1999ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை எதிர்த்து போட்டி யிட்டார். சந்திரிகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் அவர் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து எழுந்த அனுதாப அலை யால் சந்திரிகா குமாரதுங்க வெற்றி பெற்றார்.

2005ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ரணில் போட்டியிட்டார். இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தல் புறக்கணிப்புக்கு அழைப்பு விடுத்ததால் ரணில் தோல்வியை தழுவியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாகையிலிருந்து...

முரளி உள்ளிட்ட குழுவினர் காங்கேசன்துறை துறைமுகத்தில் வரவேற்றனர்.

இந்தப் படகில் சிவகங்கை படகு சேவையின் உரிமையாளர் நிரஞ்சன் நந்தகோபனும் வருகை தந்திருந்தார்.

சிவகங்கை படகு இன்று சனிக்கிழமை காலை காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து நாகபட்டினத்துக்கு பயணத்தை ஆரம்பிக்கும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் தினமும் காலை 8 மணிக்கு நாகபட்டினத்திலிருந்தும் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்தும் சிவகங்கை படகு பயணிக்கும் என்று படகு சேவையை நடத்தும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கொள்கைகளை...

மத்திய வங்கியின் உதவி ஆளுநர் சனட்ரனாத் அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள பொருளாதார கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுக்கு உறுதிப்படுத்தியுள்ளன. எனினும், ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸநாயக்கா ஆகியோர் அவரின் கொள்கையை விமர்சித்து வருகின்றனர்.

இருவரும் ஐ. எம். எவ்வின் ஒப்பந்தத்தை மாற்றவுள்ளதாகக் கூறி வருகின்றனர். தற்போதைய கொள்கைகளை மாற்றியமைக்க நினைத்தால் - அது முடியாத விடயம். அது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திலிருந்து விலகுவதற்கு வழிவகுக்கும்.

தற்போதிருக்கும் கொள்கை திட்டத்தில் சிறிய மாற்றங்களை செய்யலாம். ஆளால், நிதிக்கொள்கைகள் தொடர்பான நிலைப்பாட்டில், மாற்றங்களை ஏற்படுத்தினால் அது நாட்டை கடுமையாக பாதிக்கும். தேர்தலுக்கு பின்னர் கொள்கை மாற்றங்களை செய்வது குறித்து மத்திய வங்கி சிந்திக்கவில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மைத்திரியின்...

ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"சிறீசேன எங்கள் (சுதந்திர) கட்சியின் முன்னாள் தலைவராக இருந்தபோதிலும் அவருக்கு உதவிய அனைவரையும் அவர் இறுதியில் இழந்தார். அவர் ஏமாற்றினார். அவரின் முழு வரலாறும் மக்களை ஏமாற்றுவதாக உள்ளது.

"சமீபத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அது சட்ட விரோதம் என்று நீதிமன்றம்கூட தீர்ப்பளித்தது. இப்போது விஜயதாஸ ராஜபக்ஷ வேறு முன்னணியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார். நாம் கேள்விப்பட்டபடியே நமது முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவும் விஜயதாஸ ராஜபக்ஷவை குழப்பிவிட்டார். இப்போது அவர் வேறு இடத்தைப் பார்க்கிறார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியில் 95 வீதமானவர்கள் தன்னுடன் இருக்கின்றனர் என்று கூறிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு இன்று ஐந்து வீதம்கூட இல்லை. ஆனால், அவர் ஒரு நல்ல மனிதர் - அவர் என் நண்பர். எங்கள் கட்சியின் முன்னாள் தலைவர் எங்கும் செல்ல முடியாத நிலையை அடைந்துள்ளார். எந்த கட்சியும் அவரை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவர் தனது சமூக நம்பிக்கையை அழித்தார். அவர் இப்போது எங்காவது நிறைய குப்பைகளைத் தேடிக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், ஒரு முன்னாள் ஜனாதிபதி இவ்வளவு கீழ்த்தரமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது [illegible] கிறது" - என்றார். (ஐ)

# அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்து கடவுச்சீட்டு பெறுவதைத் தவிர்க்குக!

கொழும்பு, ஒக. 17

அத்தியாவசிய தேவை தவிர்ந்து கடவுச்சீட்டுக்களைப் பெறுவதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுப்பதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய அறிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கள் ஒக்ரோபர் மாத இறுதிக்குள் அறிமுகப் படுத்தப்பட உள்ளதால் சில நாடுகள் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களைக் கோருவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் ஒக்ரோபர் மாத இறுதிக்குள் 50 இலட்சம் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் ஹர்ஷ இலுக்பிட்டிய குறிப்பிட்டார்.

# இனப்பிரச்னைக்கு கூட்டு தீர்வே தேவை!

### ஜீவன் தொண்டமான் கருத்து

கொழும்பு, ஒக. 17

தேசிய இனப்பிரச்னைக்கு நிரந்தரமானதொரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமெனில் அது கூட்டுத் தீர்வாகவே அமைய வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தென்னாபிரிக்காவில் நிறுவப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டும் அல்ல, பிரச்னைகளை உருவாக்கியவர்களும் உள்ளே இருந்துதான் தீர்வை உருவாக்கினர். அவ்வாறு இல்லாவிடின் பிரச்னை நீளும். என்னை பொறுத்தவரையில், நிலையானதொரு தீர்வைக்காண வேண்டுமெனில் அது கூட்டு தீர்வாகவே அமைய வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிரச்னையை வைத்து வாக்கு வேட்டை நடத்த முற்படக் கூடாது, என்னை பொறுத்தவரையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் - என்றார். (அ)

## இலங்கை...

இதேவேளை, உக்ரைன் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 5 இலங்கையர்களை விடுவிக்க தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## கொள்ளையர்களுடன்...

கூறினார்.

மேலும், நாம் நடைமுறை சாத்தியமான முற்போக்கான எதிர்க்கட்சி என்ற ரீதியில் மக்களுக்காக குரல் கொடுத்து அவர்களுக்காக போராடினோம். ஐக்கிய மக்கள் சக்தியின் நிபுணத்துவ குழு ஊழல் மோசடிக்கு எதிராகப் போராடியது. நான் மேடைகளில் நாடகங்களை அரங்கேற்றவில்லை. வெற்று ஆவண கோப்புகளை காட்டி மக்களை ஏமாற்றவில்லை.

எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு நாட்டை வங்குரோத்து நிலைக்கு உள்ளாக்கிய ராஜபக்ஷக்களை நீதிமன்றத்தில் நிறுத்தினோம் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது சட்ட நடவடிக்கைகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தற்கு ராஜபக்ஷர்களே காரணம் என்று தீர்ப்பைக்கூட பெற்றுக் கொள்ள முடிந்தது என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

இவர்களால் கொள்ளையிடப்பட்ட தேசிய சொத்துகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டா ரவே. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் நாம் கொள்ளையர்களுடன் டீல் செய்ய மாட்டோம்.

கீழ்த்தரமான அரசியல் கலாசாரங்களுக்கு எமது ஆட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்படும். சிறப்புரிமைகளுக்கும் பணத்துக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை விற்கும் கலாசாரத்தை நிறைவுக்கு கொண்டு வரும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதை நினைவுபடுத்துகின்றேன். தற்போது கட்சி தாவல்கள் பரவலாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், என்னுடன் இணைந்தவர்களும் பதவிகளையும் வேறு சிறப்புரிமைகளையும் கோரவில்லை.

கொள்கை ரீதியிலேயே அவர்கள் என்னுடன் இணைந்தனர் சிறப்புரிமைகளை வழங்குவதற்கு என்னிடம் நிதி இல்லை. எம்மிடமுள்ள நிதியை கல்விக்காகவே ஒதுக்குகின்றோம். ஓடக்கூடியவர்கள் ஓடி விட்டார்கள். இடைக்கால ஜனாதிபதி ஒருவரை தேர்வு செய்வதைப் போல நினைத்துக் கொண்டே அவர்கள் கட்சி மாறிக் கொண்டிருக்கின்றனர்.

செப்ரெம்பர் 21ஆம் திகதி இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்யப் போவதில்லை. மாறாக 220 இலட்சம் நாட்டு மக்களுக்காக 170 இலட்சம் வாக்காளர்களே ஜனாதிபதியை தெரிவு செய்யப் போகின்றனர் - என்றார். (ஐ)

## கீரிமலை...

இந்த நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை கிருஷ்ணர் ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

கவனிப்பாரின்றி பல ஆண்டுகள் காணப்பட்ட கிருஷ்ணர் ஆலயம் சிதிலமடைந்த நிலையில் காணப்பட்டது. அங்கிருந்த சிலைகளும் உடைவுற்ற நிலையில் இருந்தன என்று நேற்று வழிபட சென்ற மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்த ஆலயத்துக்கு வருகை தந்து மக்கள் வழிபட முடியும் என்று படைத் தரப்பு அதிகரித்துள்ளது.

இதேநேரம், போர் காலத்தில் வலி. வடக்கு பிரதேசத்தின் பெரும் பகுதி இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. போர் முடிந்த பின்னர் பல கட்டங்களாக மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டன. எனினும், இன்னமும் பெரும்பகுதி நிலங்கள் இராணுவத்தின் பிடியிலேயே உள்ளன. இதில், தமிழ் மக்களின் காணிகள் மற்றும் புகழ்பெற்ற ஆலயங்கள் பல கவனிப்பாரின்றிய நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மின்சாரம் தாக்கியதில் இளைஞர் உயிரிழப்பு!

### ஓமந்தைப் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஓக. 17

வவுனியா, ஓமந்தை ஆறுமுகத்தான்குளம் பகுதியில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை தோட்டத்துக்குச் சென்ற தனது மகன் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில், அவரது தந்தை தேடியுள்ளார்.

இதன்போது காணியின் பின்புறத்தில் குறித்த இளைஞர் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை கைப்பற்றி, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் பத்மநாதன் டயான் எனும் 21 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டே இவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-4)

## சரியான நேரத்தில் தமிழ் அரசு நிலைப்பாட்டை அறிவிக்கும்

### கூறுகிறார் சுமந்திரன்



கிளிநொச்சி, ஓக. 17

சரியான நேரத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள் விக்குப் பதிலளிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்துள்ளது. ஏனைய கட்சிகள் தமது ஆதரவு நிலைப்பாட்டை வெளியிட்ட நிலையில் தமிழரசுக் கட்சி எப்பொழு தமது நிலைப்பாட்டை வெளியிடும் என கேள்வி எழுப்பப்படுகின்றது.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தேர்தலுக்கு அண்மித்த காலத்தில் தான் எமது நிலைப்பாட்டை அறிவித்தோம்.

இந்த தடவை அது ஒரு வித்தியாசமாக வரவேண்டும் என்ற எந்த தேவையும் கிடையாது. எல்லா வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையை எதிர்பார்க்கிறோம்.

அவர்களின் தேர்தல் அறிக்கையில் முழு நாட்டுக்கும் என்ன சொல்லியிருக்கிறார் என பார்த்து சரியான நேரத்தில் அறிவிப்போம் - என்றார். (அ)

## மியன்மார் முகாம்களில் உள்ள 34 இலங்கையர்கள்

கொழும்பு, ஓக. 17

ஆட்கடத்தலுக்கு ஆளான 34 இலங்கையர்கள் மியன்மாரில் இருந்து மீட்கப்பட உள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் சட்டவிரோத முகாம்களில் இருந்து தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ள 20 இலங்கையர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

"மீட்கப்பட்டவர்கள் நல்ல உடல்நிலையில் உள்ளனர், இருப்பினும் அவர்கள் ஆலோசனைக்கு அனுப்பப்பட வேண்டும்" என்று பாலசூரிய கூறினார், அவர் அவர்களுடன் வீடியோ அழைப்பில் பேசினார்.

இந்த குழுவை கூடிய விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார். (அ)

### கனடாவில் தமிழர் இனப்படுகொலை தூபி

## தூதுவரை அழைத்து கடும் அதிருப்தி வெளியிட்டார் அமைச்சர் அலி சப்ரி!

கொழும்பு, ஓக. 17

**கனடாவின் பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான கனடா தூதுவரை அழைத்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

கனடாவின் வாக்குவங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்த பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக அலி சப்ரி தெரிவித்தார்.

பிராம்டன் நகர சபையின் தவறான ஆலோசனையின் அடிப்படையிலான செயற்பாடு இலங்கையில் உள்ள அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் புண்படுத்துகின்றது என அவர் கூறினார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டானது, தீங்கிழைக்கும் தவறான தகவல்களை அடிப்படையாக கொண்ட புனையப்பட்ட மற்றும் தேசிய சர்வதேச அளவில் எந்தவொரு பொறுப்பான அதிகாரியாலும் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டு என அலி சப்ரி சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் கடந்தஇரண்டு வருடங்களாக பொருளதார நெருக்கடி நிலவிய போதிலும், மோதல் முடிவுக்கு வந்த பின்னர் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது என தெரிவித்துள்ள அலி சப்ரி, கனடா அரசாங்கம் தலையிட்டு குறிப்பிட்ட நினைவுத்தூபியை கட்டுவதை தடுத்து நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## கடலோர பாதுகாப்புப் படையின் திறன்களை மேம்படுத்த புதிய கடல்சார் பயிற்சி நிலையம்



கொழும்பு, ஓக. 17

இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பயிற்சி திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கினால் கடல்சார் பயிற்சி நிலையம் கிரிந்தவில் உள்ள இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் மேம்பட்ட பயிற்சி மையத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த பயிற்சித் திட்டமானது இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கு உதவுகிறது.

இந்த நிகழ்வில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பயற்சி திட்டத்தின் மூலம், கடற்கொள்ளைகளை எதிர்த்தல் , விசேட பயிற்சிகள், கடத்தல்களை எதிர்த்தல் , கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில், இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்க தீர்மானிக்கவில்லை

### கூறுகின்றார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, ஓக. 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கத் தாம் தீர்மானிக்க வில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றினூடாக அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன் தன்னை பற்றி சிலர் வெளியிடும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் மைத்ரிபால சிறிசேன தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள பிரச்னை தற்போது நீதிமன்றில் இருப்பதாகவும், கட்சியின் தலைவர் யார் என்பது தொடர்பில் நீதிமன்றம் இன்னும் தீர்மானம் வழங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## வவுனியா மெனிக்பாமில் ஆயுதத்தால் தாக்குதல்!

### சிறுவன் உட்பட நால்வர் காயம்!

வவுனியா, ஓக. 17

வவுனியா - மனிக்பாம் பகுதியில் ஆயுதத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில் சிறுவன் ஒருவர் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த அடையாளம் தெரியாத சிலர் இவ்வாறு தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பணம் மற்றும் தங்க ஆபரணங்களைக் கோரி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது காயமடைந்த மூவர் செட்டிக்குளம் பிரதேச வைத்தியசாலையிலும் ஒருவர் வவுனியா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## எம்பொக்ஸ் பரவலை தடுக்கும் முறைமைகளை பலப்படுத்துக!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 17

எம்பொக்ஸ் என்ற குரங்கு காய்ச்சல் இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்கும் நோயாளர்களை அடையாளம் காண்பதற்குமான முறைமைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அதன் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க, நோயாளர்கள் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் உள்ளிட்ட இடங்களில் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதற்கான முறைமைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார்.

குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருபவர்கள் உரிய முறையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க அறிவுறுத்தியுள்ளார். (அ)

## கைதி ஒருவர் தப்பியோட்டம்!

கொழும்பு, ஓக. 17

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த கைதி ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

பொலனறுவை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் என வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர். தப்பிச்சென்ற கைதியைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org